

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முரசொலி நாளிதழில் தலைமைக் கணக்காளராக பணியாற்றிய அழகு மாணிக்கம் அவர்கள் காலமானதையொட்டி பெசன்ட் நகரிலுள்ள அவரது இல்லத்திற்கு 2.10.2025 அன்று நேரில் சென்று, அன்னாரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, கவிப்பேரரசு வைரமுத்து, 'முரசொலி' பொது மேலாளர் எஸ். ராஜசேகரன் ஆகியோர் உள்ளனர்.

கரூர் சம்பவம்:

# தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அரசு கடும் நடவடிக்கை எடுக்கும்!

## நெல்லையில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டி!

நெல்லை, அக்.5–

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (03.10.2025) முதலமைச்சர் கோப்பை மாநில அளவில் மாணவிகளுக்கான ஹாக்கி போட்டி சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தலைமையில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே. ஆர்.ராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பந்தை அடித்து போட்டியினை துவக்கி வைத்தார்.

அதன் பின்னர் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் பேட்டியின் போது தெரிவித்ததாவது.

கரூர் சம்பவம் குறித்து தகவல் அறிந்தவுடன் தமிழக முதலமைச்சர் அவர்கள் உறக்கமில்லாமல் நள்ளிரவில் நேரடியாக சென்று பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறினார். உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலியும் செலுத்தினார். வேண்டுமென்றே விஜய் சதி செய்து காலதாமதத்தை ஏற்படுத்தி கரூர் வந்ததாலேயே இவ்வளவு பெரிய விபத்து ஏற்பட்டது. 19 அடி அகலம் உள்ள சாலையில் 12 அடி அகலம் உள்ள பேருந்து நிறுத்தியதால் தள்ளுமுள்ளு ஏற்பட்டு நெருக்கடி உருவாகி உயிர் இழப்புகள் ஏற்பட்டது. விஜய் வரும் போதே பத்தாயிரம் பேரை உடன் அழைத்து வருகிறார். உள்ளூர் மக்கள் அவரை பார்க்க முடியாத நிலை ஏற்பட்டதால் முண்டியடிக்கும் சூழல் உருவானது. பிரச்சாரப் பகுதிக்கு காலதாமதமாக வந்த விஜய் ஏழு நிமிடம் சூட்டிங் முடித்துவிட்டு 41 பேர் உயிரைக் குடித்துவிட்டு தனி விமானம் ஏறி சென்று பனையூரில் பதுங்கி விட்டார்.கூட்டத்தில் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் கட்சியின் தலைவன் நேரடியாக சென்று மக்களை சந்தித்திருக்க வேண்டும் கட்சி கூட்டத்தில் நடந்த நிகழ்விற்கு அவரது கட்சிக்கொடியை அறக்கம் பத்திலாவது பறக்கவிட்டு இருக்க வேண்டும்.



கரூர் சம்பவத்தில் ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் விஜய்க்கு ஆதரவாக குரல் கொடுத்த பின்னர் அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்து விட்டு மக்களுக்கு ஆறுதல் தெரிவிப்பதாக காணொலி ஒன்றை வெளியிட்டார்.50 வயதில் விஜய் தான் அங்கிள் ஆனால் அவர் எல்லாரையும் அங்கிள் அங்கிள் என சொல்லி வருகிறார்.சினிமாவில் ஒப்பந்தம் போட்டு நடித்துக் கொண்டிருந்த விஜய் அமித்ஷாவிடம் அரசியலில் நடிக்க ஒப்பந்தம் போட்டு கட்சியை தொடங்கி நடத்தி வருகிறார். தி.மு.க.விற்கும் எந்த கட்சிக்கும் ரகசிய தொடர்பு இருந்தது கிடையாது நேரடியாகவே த.வெ.க.விற்கும் தி.மு.க.விற்கும் தொடர்பு உள்ளது. விஜயை எனக்கு பிடிக்கும் அவரது காமெடிகளை ரசித்து பார்ப்பேன். அந்த வகையில் தமிழக வெற்றி கழகத்திற்கும் தி.மு.க.விற்கும்நேரடி தொடர்புள்ளது. கரூர் விவகாரத்தில் அவர் (விஜய்) தவறு செய்திருந்தாலும் அவரை வழி நடத்தியவர் யாராக இருந்தாலும் இந்த அரசு கடுமையாக நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நெல்லை மேற்கு மாவட்டம்

# ஆலங்குளம் தொகுதி ஒன்றிய - பேரூர்க் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு!

நெல்லை, அக்.5 -

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி நெல்லை மேற்கு மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி ஒன்றிய, பேரூர், கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க் கண்ட தேதிகளின் அட்டவணைப்படி நடைபெறுகிறது. என நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

அதன்படி இன்று (5.10.2025 ஞாயிறு) காலை 11 மணியளவில் ஆலங்குளம் கிழக்கு,ஆலங்குளம் மேற்கு ஒன்றியம் சார்பில் ரெட்டியார்பட்டி கே.ஆர். திருமண மண்டபத்தில் ஒன்றிய செயலாளர்கள் மு.செல்லத்துரை, சமுத்திர பாண்டியன் ஏற்பாட்டிலும், (9.10.2025 வியாழன்) மாலை 6 மணி அளவில் கீழப்பாவூர் கிழக்கு ஒன்றியம் கழுநீர்குளம் கனியம்மாள் மகாலில் ஒன்றிய செயலாளர் சிவன் பாண்டியன் ஏற்பாட்டிலும், (11.10.2025 சனிக்கிழமை) மாலை 4 மணி அளவில் ஆலங்குளம் தெற்கு ஒன்றியம், ஆலங்குளம் பேரூர் சார்பில் ஆலங்குளம் சமுதாய நலக்கூடம் பேருந்து நிலையம் அருகில் ஒன்றிய செயலாளர் சிவக்குமார், பேரூர் செயலாளர் நெல்சன் ஆகியோர் ஏற்பாட்டிலும், அன்று மாலை 6 மணி அளவில் கீழப்பாவூர் வடக்கு ஒன்றியம், கீழப்பாவூர் பேரூர் சார்பில் ராம ரத்தின லட்சுமி மஹால் சிவகாமிபுரம் கீழப்பாவூர் விலக்கு, ஒன்றிய செயலாளர் பொன் செல்வன், பேரூர் செயலாளர் ஜெகதீசன் ஆகியோர் ஏற்பாட்டிலும் நடைபெறுகிறது. (12.10.2025 ஞாயிறு) காலை 10:30 மணி அளவில் கடையம் கிழக்கு ஒன்றியம் சார்பில் பாப்பான்குளம் அருணை மஹாலில் ஒன்றிய செயலாளர் குமார் ஏற்பாட்டிலும், அன்று நண்பகல் 12 மணி அளவில் முக்கூடல் பேரூர் சார்பில் முக்கூடல் ஆர்.எல்.திருமணம் மண்டபத்தில் பேரூர் செயலாளர் லட்சுமணன் ஏற்பாட்டிலும், அன்று மாலை 5 மணி அளவில் பாப்பாக்குடி ஒன்றியம் சார்பில் பாப்பாக்குடி சேனைத் தலைவர் திருமணம் மண்டபத்தில் ஒன்றிய செயலாளர் மாரிவண்ணமுத்து ஏற்பாட்டிலும், அன்று இரவு 7 மணி அளவில் கடையம் வடக்கு ஒன்றியம் சார்பில் மேட்டூர் சமுதாய நலக்கூடத்தில் ஒன்றிய செயலாளர் மகேஷ் மாயவன் ஏற்பாட்டிலும், (13.10.2025 திங்கள்) காலை 11 மணியளவில் கடையம் மேற்கு ஒன்றியம் சார்பில் கடையம் மதன்ஸ் திருமண மண்டபத்தில் ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார் ஏற்பாட்டிலும், அன்று மாலை 5 மணி அளவில் ஆழ்வார்குறிச்சி பேரூர் சார்பில் ஆழ்வார்குறிச்சி பள்ளிவாசல் திருமணம் மண்டபத்தில் பேரூர் செயலாளர் அழகேசன் ஏற்பாட்டிலும் நடைபெறுகிறது.



மேற்கண்ட பட்டியலில் உள்ளவாறு நடைபெற உள்ள ஒன்றிய, பேரூர், பொது உறுப்பினர் கூட்டத்தில் அந்தந்த ஒன்றிய, பேரூர் பகுதிக்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பேரூர், நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் சார்பு அணிகளின் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் அணி நிர்வாகிகள், கழகத் தோழர்கள், (BLA2) BDA, BLC உள்ளிட்டோர் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காட்டில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை பார்வையிட்டு உடனடியாக தீர்வு காணப்பட்ட பயனாளிகளுக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜே.எல்.ஈஸ்வரப்பன் ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ஜே.யு.சந்திரகலா, மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கரூர் துயரம்: காழ்ப்புணர்ச்சியுடன் குறைசொல்வதை நிறுத்திவிட்டு

# இனியாவது விஜய் பொறுப்புடன் செயல்பட வேண்டும்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் அறிவுரை!

சென்னை, அக். 5 -

கரூர் துயரச் சம்பவம் குறித்து காழ்ப்புணர்ச்சியுடன் குறை சொல்வதை நிறுத்திவிட்டு இனியாவது விஜய் பொறுப்புடன் செயல்பட்டு தனது கட்சியையும் தொண்டர்களையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியுள்ளது.

இதுகுறித்து 4.10.2025 தேதிய "தினகரன்' தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-

கரூர் மாவட்டம் வேலுச்சாமிபுரத்தில் தவெக தலைவர் விஜய் பரப்புரையின் போது கூட்ட நெரிசலில் சிக்கி பெண்கள், குழந்தைகள் உள்பட 41 பேர் உயிரிழந்தனர். சம்பவம் நடந்தவுடன் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் களத்தில் இருந்து தலைமறைவாகிவிட்டனர். இதனால் கூட்டத்தில் சிக்கி காயமடைந்தவர்களுக்கு முதலுதவி செய்ய கூட யாரும் இல்லாத நிலையில் மக்கள் நிர்கதியாகினர். இப்படியான ஒரு தருணத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டது. தமிழக முதல்வரே நேரில் சென்று உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு ஆறுதல் தெரிவித்தார். மேலும் அரசு சார்பில் உரிய நிவாரணம் வழங்கப்பட்டது.



தினகரன்

அரசை குறை கூறுவதா?

ஒரு கூட்டத்தில் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் நடவடிக்கை எடுக்க அரசுக்கு அதிகாரம் உண்டு. அதே போல் நிகழ்ச்சி ஏற்பட்டாளர்களுக்கும் சமமான பொறுப்பும், கடமையும் இருக்கிறது. ஆனால் தவெக கட்சி நிர்வாகிகள் மக்களை அம்போ என்று தவிக்கவிட்டு தலைமறைவு ஆகிவிட்டதை எந்த வகையில் நியாயப்படுத்த முடியும். அரசும் அமைதியாக இருந்திருந்தால் அதையும் உள்நோக்கத்தோடு அரசியலாக்கி இருக்கமாட்டார்கள் என்று என்ன நிச்சயம். கட்சி பாரபட்சமின்றி, பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் சொந்தங்கள் என்ற உணர்வோடு செயல்பட்ட தமிழக முதல்வரையும், தமிழக அரசையும் அரசியல் அரைவேக்காடுகள் விமர்சனம் செய்வது ஏற்ககூடியதல்ல.

தங்கள் தரப்பில் நடந்துள்ள தவறுகளை கவனித்து அதை திருத்திக்கொள்ள முற்படாமல் நடந்த சம்பவத்தை அப்படியே ஆளும் கட்சி மீது திசை திருப்ப முயற்சிப்பது சிறு பிள்ளைத்தனமானது. உயிரிழப்பு சம்பவத்தை திசை திருப்ப சமூக வலைதளங்களில் புனைவு கதைகளை பலர் பரப்புகின்றனர். இவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. காலை முதல் இரவு வரை மக்களை காக்க வைத்து தாமதமாக களத்துக்கு வருகை தந்த தவெக தலைவர் விஜய் செய்தது தான் உயிரிழப்புக்கு காரணமாகி உள்ளது. குறித்த நேரத்தில் கூட்டத்துக்கு வருகை தந்து தொண்டர்கள் பத்திரமாக வீடு சென்று சேர்ந்தார்களா என்பதை உறுதி செய்த மகத்தான தலைவர்கள் தமிழ்நாடு கண்டுள்ளது. இது போன்ற தலைவர்களின் பண்பை முன்னுதாரணமாக விஜய் கடைபிடித்திருக்க வேண்டும்.

ஆனால் விஜய் பகட்டு அரசியலுக்காகவும், மக்களை கவர்வதற்கும் மகத்தான தலைவர்களின் படத்தையும், பெயரையும் பயன்படுத்துகிறாரே தவிர அவர்களது கொள்கையை பின்பற்றுபவராக தெரியவில்லை. உங்களை காண வேண்டும் என்ற ஆசையில் மக்கள் வந்தார்களா? அல்லது தவெக நிர்வாகிகளால் அழைத்து வரப்பட்டார்களா?. அது எப்படியோ இருக்கட்டும். மக்கள் துயரத்தின் போது ஒரு கட்சி உறுதுணையாக நிற்க வேண்டுமே தவிர, சம்பவம் நடந்த பிறகு அரசு களத்தில் இறங்கி நிவாரண பணிகளை முழு வீச்சில் மேற்கொண்ட பிறகு ஆற அமர நாங்களும் களத்துக்கு சென்று பாதிக்கப்பட்டவர்களை சந்திப்போம் என்று தவெக நிர்வாகிகள் கூறுவது நகைப்புக்குரியது.

கரூர் சம்பவத்தை பொறுத்த வரை தமிழக முதல்வர் போர்க்கால நடவடிக்கை எடுத்து செயல்பட்டார். தமிழக அரசும் தனது பொறுப்பையும், கடமையையும் சிறப்பாக செய்துள்ளது. ஆனால் இதை அரசியல் கண்ணோட்டத்துடனும், காழ்ப்புணர்ச்சியுடனும் குறைசொல்வதை நிறுத்தி இனியாவது விஜய் பொறுப்புடன் செயல்பட்டு தனது கட்சியையும், தொண்டர்களையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்பதே மூத்த அரசியல்வாதிகளின் அறிவுரையாக இருக்கிறது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

### தலைமைக் கழக அறிவிப்பு

தருமபுரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த சி.செந்தில்குமார், பூம்புகார் சின்னசாமி, கே.பி. வைத்தியலிங்கம் மற்றும் ஓரப்பாட்சியூர் கிளையைச் சேர்ந்த லோகநாதன் ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

அண்ணா அறிவாலயம்
சென்னை - 600 018.
நாள்: 04-10-2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, பண்ருட்டி ஒன்றியத்திற்கு உட்பட்ட காட்டுக்கூடலூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ. 28.10 லட்சம் மதிப்பீட்டிலும், மேல்காங்கேயன்குப்பம் ஊராட்சியில் அண்ணா கிராம மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ. 32 லட்சம் மதிப்பீட்டிலும் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடங்கள் கட்டப்பட்டது, இதனை நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சபா. பாலமுருகன், பொ.புகழேந்தி, சுமதி நந்தகோபால் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

கன்னியாகுமரி மேற்கு மாவட்டம், தக்கலை வடக்கு ஒன்றிய துணைச் செயலாளரும் - மாவட்ட சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு துணை அமைப்பாளருமான ஜீட்சேம் அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (suspension) வைக்கப்படுகிறார்.


அண்ணா அறிவாலயம்
சென்னை - 600 018.
நாள்: 04-10-2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## து.ப. அழகமுத்து

### அக்டோபர் 5 (1987)



பழம்பெரும் சுயமரியாதை இயக்க செயல்வீரரும் – திருச்சி மாவட்டத்தில் கழகத்தை கட்டி வளர்த்த ஆரம்பகால தலைவர்களில் ஒருவர்.

1962ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் – தி.மு.கழக அரசில் அரசு கொறடாவாகவும் பணியாற்றியவர்.

1952 முதல் 1955 வரை ஊராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியவர்.

1955ல் கருப்புக் கொடி போராட்டத்தில் கலந்து கொண்டவர். 1964ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றவர்.

கழக நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**